இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 03.04.2026

# கொரோனா காலத்தில் பழனிசாமி!

“கொரோனா இருந்த காலத்திலும் சிறப்பான ஆட்சியை நான் கொடுத்தேன்” என்று சொல்லி இருக்கிறார் பழனிசாமி. மக்கள் மறந்திருப்பார்கள் என்ற நினைப்பில் இப்படி கப்சாக்களை அடித்து விடுகிறார் பழனிசாமி.

**கொரோனா பரவிய போது அ.தி.மு.க.வின் பழனிசாமி ஆட்சி தமிழ்நாட்டில் இருந்தது. என்ன செய்தார்கள் என்றால் ஊரடங்கு போட்டுவிட்டு அன்றைய முதலமைச்சர் பழனிசாமியும், அமைச்சர்களும் பதுங்கி விட்டார்கள். அப்போதும் ‘ஒன்றிணைவோம் வா’ என்ற திட்டத்தை தொடங்கி மக்களுக்கு உணவுப் பொருள் வழங்கியது தி.மு.க. உணவுப் பொருள் தயாரித்து தந்தது தி.மு.க. தொண்டர்கள்.**

கொரோனாவைக் கட்டுப்படுத்த மிக முக்கியமானது தடுப்பூசி தான். அதனைக் கூட ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டுக்குத் தரவில்லை. பழனிசாமி அதனை துணிச்சலாகத் தட்டிக் கேட்கவும் இல்லை. ஒன்றிய பா.ஜ.க. அரசை நோக்கி உச்சநீதிமன்ற நீதிபதிகள் கேள்வி எழுப்பினார்கள். ஆனால் பழனிசாமி, வீட்டுக்குள் பதுங்கிக் கொண்டார்.

**திராவிட மாடல் அரசு மலர்ந்ததும் தடுப்பூசி செலுத்துவதை மாபெரும் இயக்கமாகவே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாற்றினார்கள். கோவிட் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்த, மக்களுக்குத் தடுப்பூசி செலுத்துவதற்கான பல சிறப்பு முயற்சிகளை அரசு எடுத்தது. மாநிலம் முழுவதும், வாரம் தோறும் தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டன. அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தடுப்பூசிக்குத் தகுதியானவர்களில் 8.09 சதவிகித மக்களுக்கு முதல் தவணை தடுப்பூசியும், 2.84 சதவிகித மக்களுக்கு இரண்டாம் தவணை தடுப்பூசியும் என்ற குறைந்த அளவிலேயே செலுத்தப்பட்டிருந்தது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய முயற்சிகளால் இந்த நிலை மாறி, ஏழே மாதங்களில் 86.95 சதவிகித மக்களுக்கு முதல் தவணை தடுப்பூசியும், 60.71 சதவிகித மக்களுக்கு இரண்டாம் தவணையும் என 8.55 கோடி தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன. ஓராண்டுக்குள் அனைவருக்கும் இரண்டு தவணை தடுப்பூசியும் போட்டு, பூஸ்டர் தடுப்பூசியும் போட்டு கொரோனாவை கட்டுப்படுத்தியவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

கொரோனா காலத்தில் மின் கட்டணம் அனைத்து வீடுகளுக்கும் அதிகம் ஆனது. ‘எல்லோரும் வீட்டில் இருப்பதால் மின் கட்டணம் அதிகம் ஆகிறது’ என்று பழனிசாமி விளக்கம் அளித்தார். முந்தைய மாதம் ரூ.420 கட்டணமாக ஒருவருக்கு இருந்தது. கொரோனா காலத்தில் 5,200 ரூபாய் கட்டணமாக வந்தது. முந்தைய மாதம் வரை ரூ.900 செலுத்தியவருக்கு ரூ.4 ஆயிரம் வந்தது. ஒருவர் வீடு மூன்று மாதமாக பூட்டி இருக்கிறது. அவருக்கு ரூ.9 ஆயிரம் கட்டணம் வந்தது. ஏழை விவசாயி ஒருவருக்கு ஒரு லட்சம் ரூபாய் கட்டணமாக வந்தது. மின் கட்டணம் மூலம் மக்களிடம் கொள்ளை அடிக்கும் வேலையைச் செய்தது பழனிசாமி ஆட்சி.

அநியாயக் கட்டணம் வசூலித்தது மட்டுமல்ல, அதனைச் செலுத்துவதற்கும் கட்டாயப்படுத்தினார்கள். சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மக்களுக்கு மட்டும் சலுகை அறிவித்தார்கள். மற்ற மாவட்டத்து மக்களை ஏமாற்றினார் பழனிசாமி. கொரோனா கொடூரத்திலும் மக்களுக்கு ஷாக் கொடுத்துக் கொண்டு இருந்தார் பழனிசாமி.

- ★ **கொரோனா பரவுகிறது என்று தெரிந்து முன்கூட்டியே சட்டசபையை ஒத்திவைக்கச் சொன்னார் தி.மு.க. தலைவர். முதலில் பழனிசாமி மறுத்தார். அதன் பிறகு ஒத்தி வைத்தார்.**
- ★ **அனைவருக்கும் டெஸ்ட் எடுக்கச் சொன்னார் தி.மு.க. தலைவர். முதலில் பழனிசாமி மறுத்தார். அதன்பிறகு அதிக டெஸ்ட் எடுக்கத் தொடங்கினார்.**
- ★ **வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதம் ரூ.5 ஆயிரம் கொடுக்கச் சொன்னார் தி.மு.க. தலைவர். பணம் இல்லை என்று மறுத்தார் பழனிசாமி. அதன்பிறகு ரூ.2500 கொடுத்தார்.**
- ★ **பத்தாம் வகுப்பு தேர்வை ரத்து செய்யச் சொன்னார் தி.மு.க. தலைவர். அதன்பிறகுதான் ரத்து செய்தார்.**
- ★ **இ - பாஸ் ரத்து செய்யச் சொன்னார் தி.மு.க. தலைவர். அதன்பிறகு தான் ரத்து செய்தார்.**

– இப்படி ஒவ்வொன்றையும் தி.மு.க. சொன்னபிறகுதான் செய்தார் அன்றைய முதலமைச்சர் பழனிசாமி.

கொரோனா பரவலின்போது நிதி நிலையை சுட்டிக்காட்டி அரசு ஊழியர்கள் ஈட்டிய விடுப்பை சரண் செய்து பணமாகப் பெறும் நடைமுறை 27.4.2020 முதல் பழனிச்சாமியால் நிறுத்தப்பட்டது. இதனை மீண்டும் செயல்படுத்த அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்தனர். அதன்படி, ஈட்டிய விடுப்பை சரண் செய்து பணமாகப் பெறும் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தியது ‘திராவிட மாடல்’ அரசு.

பழனிசாமி தனது ஆட்சிக் காலத்தில் அதிகளவு கடன் வாங்கினார். ‘கொரோனா வந்ததால் கடன் வாங்க வேண்டிய தேவை ஏற்பட்டது’ என்று சொன்னார். கடன் வாங்கி, மக்களுக்கு எந்த நன்மையும் செய்யவில்லை என்பதுதான் உண்மை.

**‘தமிழ்நாட்டில் ஒரே ஒருவருக்கு கொரோனா வந்தால் கூட அம்மாவின் அரசு அவரை காப்பாற்றும்’ என்று சட்டமன்றத்தில் சொன்னவர் பழனிசாமி. ஆனால் 38 ஆயிரம் பேர் இறந்தார்கள். கொரோனா வைரஸ் பற்றிய புரிதலே இல்லாமல் முதல் மூன்று மாத காலம் அனைத்து வகையிலும் மறைத்தவர் பழனிசாமி. இறந்தவர் கணக்கில் பொய்க்கணக்குக் காட்டியவர் பழனிசாமி. கொரோனாவில் ஊழல் செய்தவர் பழனிசாமி என்பதை மக்கள் மறக்கவில்லை.**



கழகத் தலைவரும் – முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.4.2026) கரூரில், கரூர் மாவட்ட இந்திய தொழிற் கூட்டமைப்பு (CII) தலைவர் பெருமாள் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து “VISION KARUR” என்ற புத்தகத்தினை வழங்கினார்கள். உடன் கரூர் மாவட்ட கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான வி. செந்தில்பாலாஜி உள்ளார்.



கழகத் தலைவரும் – தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.4.2026) கரூரில், கரூர் மாவட்ட வர்த்தக கழகம், தமிழ்நாடு வணிகர்கள் சங்க பேரமைப்பின் மாவட்டத் தலைவர் வெங்கடேசன், கைத்தறி சங்கத்தின் தலைவர் அப்பா தனபதி ஆகியோர் சந்தித்து, வணிகர்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் கரூர் மாவட்ட கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான வி. செந்தில்பாலாஜி உள்ளார்.

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை!

# தீவிர களப்பணியில் ஈடுபட்டு வேட்பாளர் வெற்றியை உறுதி செய்வோம்!

### மதுராந்தகம் தொகுதி வேட்பாளர் அமலு பொன்மலரை அறிமுகப்படுத்தி – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் உறுதி!

காஞ்சிபுரம், ஏப்.3-

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் அமலு பொன்மலரை மண்டல பொறுப்பாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிமுகம் செய்து வைத்து சிறப்புரை ஆற்றினார். மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தி.மு.க. வேட்பாளர் அமலு பொன்மலர் அறிமுக கூட்டம் சிலாவட்டம் கிராமத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார்.ஒன்றிய செயலாளர் கண்ணன் அனைவரையும் வரவேற்று பேசினார். காஞ்சிபுரம் எம்.பி. செல்வம், தொகுதிப் பொறுப்பாளர் சாரதி மணிமாறன், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பிரபு, ராஜேந்திரன், அன்புச் செல்வன், பாரதி அண்ணா, ராஜ்குமார், ராஜேந்திரன், ஷாஜகான், சம்சுதீன், முகமது யூனஸ், ஷேக் தாவூத், ஏஜ்ஜாஸ், ஜுபைர் அலி, முகமது, அக்பர் அகமது, செம்பியான், தினேஷ், கேசவன், மலர்விழி குமார், தினகரன், நாராயணன், பிரேம்சந்த், உசேன், செம்பருத்தி, துர்கேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் மண்டல பொறுப்பாளர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் கலந்து கொண்டு பேசியதாவது:-



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வெற்றிகரமாக உருவாக்கியுள்ளார். இணக்கமான கூட்டணியை வெற்றிகரமாக முடித்து அறிவாலயத்திலேயே தேநீர் விருந்து வைத்திருந்தார். இந்தப் பெரிய கூட்டணியை வெற்றி கூட்டணியை உருவாக்கியுள்ளோம். இது போன்ற இணக்கமான கூட்டணியை உருவாக்கும் போது பல இடர்பாடுகள் ஏதேனும் இருந்தாலோ, அதைப் பற்றி எல்லாம் மற்றவர்கள் பேசி இருந்தாலும், நானே பேசியிருந்தாலோ, இதற்கெல்லாம் வருத்தப்பட வேண்டாம். நானே வருந்துகிறேன் என்று பொதுவெளியிலே வருத்தம் தெரிவித்தார். இப்படி முதலமைச்சராக இருந்த அவரே தன் நிலையை விட்டு இறங்கி இந்த கூட்டணி தொடர்ந்து சிறப்பாக செயல்பட வைத்துள்ளார்.

அதே போன்று ஒன்றிய செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், கட்சி தோழர்கள், கழகத் தலைவரின் இந்த செயல்பாட்டை பூத்தளவில் கொண்டு செல்ல வேண்டும். கூட்டணி கட்சிகளுடன் ஒன்றிணைந்து இணக்கமாக பணியாற்ற வேண்டும்.

பூத்துகளில் வாக்கு கேட்கின்ற போது, நம் வீட்டு கல்யாணத்தில் விருந்தாளிகளை உபசரித்து, அன்போடு நடத்துவோமோ அதே போன்று இந்த தேர்தலில் வாக்காளர்களை அழைத்து வந்து உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தத் தி.மு.க. கூட்டணியில் புதிய கூட்டணியாக தே.மு.தி.க. போன்று நமது கூட்டணியில் புதிய கட்சிகளும் இணைந்துள்ளனர.

தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதியிலும் தி.மு.க. கூட்டணியே வெற்றி பெறும். ஆகவே அந்த அளவிற்கு தோழர்கள் தீவிரமாக பணியாற்ற வேண்டும். வீடு வீடாகச் சென்று வாக்குகளை சேகரிக்க வேண்டும். இந்த தொகுதியில் 50 சதவீதத்திற்கு மேல் நம் கட்சியில் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர், அந்த வாக்குகளை பெற்றாலே நாம் வெற்றி பெறுவோம், மேலும் நம் கூட்டணி கட்சிகள் எல்லாம் தற்போது சேர்ந்துள்ளதால் மேலும் நமக்கு பலம் சேர்ந்துள்ளது.

ஆகவே இந்த மதுராந்தகம் தொகுதியில் வெற்றி உறுதியாகி உள்ளது. ஆகவே நீங்கள் எல்லாம் தீவிரமாக உழைத்தால் 40,ஆயிரத்திற்கும்மேல் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவோம். இந்த தொகுதியில் உள்ள நிர்வாகிகள் அனைவரும் கண்காணிக்கப்படுகின்றீர்கள். ஆகவே தேர்தலில் சிறப்பாக செயலாற்ற வேண்டும். முதலமைச்சர் மு .க. ஸ்டாலின் அவர்கள் சிறந்த திட்டங்களை உருவாக்கிக் கொடுத்துள்ளார்கள். அதில் பெண்களுக்கு அதிக அளவிலே திட்டங்களை செயல்படுத்தியுள்ளார். ஆகவே நாம் அவர்களிடத்திலேயே வாக்கு சேகரிக்க கூடிய தகுதியும் திராணியும் நம்மிடத்தில் மட்டுமே உள்ளது. ஆகவே 23ஆம் தேதி நடைபெறும் தேர்தலில் கூட்டணி கட்சி நிர்வாகிகள் அனைவரும் உழைத்து இங்கே போட்டியிடுகின்ற வேட்பாளர் அமலு பொன் மலருக்கு அதிக வாக்குகள் பெற்றுத் தந்து, மே 4 ஆம் தேதி சட்டமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். நமது முதலமைச்சர் கொண்டுவந்துள்ள திட்டம், யாரும் கொண்டு வராத திட்டம், எந்த ஆட்சியிலும் கொண்டு வராத திட்டம், கடந்த கால ஆட்சியிலே ஜெயலலிதா கொண்டு வந்த திட்டம் மிக்ஸி, கிரைண்டர் திட்டம் தற்போது அந்த மிக்ஸி கிரைண்டர் யார் இடத்திலும் இல்லை. ஆனால் கலைஞர் கொடுத்த கலர் டி.வி. மட்டும் இன்னும் ஓடிக்கொண்டிருக்கிறது ஆகவே தமிழ்நாடு முதலமைச்சர் மு .க. ஸ்டாலின் அவர்கள் பெண்களுக்காக 8,000 கூப்பன் வழங்க உள்ளார். இந்த கூப்பனை பெற்று நீங்கள் வேண்டிய பொருளை வாங்கிக் கொள்ளலாம். இப்படிப்பட்ட வாய்ப்பு எந்த ஆட்சியில் இருந்தது. மகளிர் உரிமைத் தொகை ஆயிரம் ரூபாய் வரவே வராது என்று நினைத்திருந்தனர், ஆனால் அதை வழங்கினார் நமது முதல்வர் தற்பொழுது தேர்தல் அறிக்கையில் 2000 வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

கலாச்சார சீரழிவை செய்யும் நடிகர் இங்கே உள்ளார். மனைவியை வீட்டில் வைத்துக் கொண்டு திருமணத்திற்கு இன்னொரு பெண்ணோடு செல்கிறார். இதை மக்கள் கண்டிக்கிறார்கள். திருமணமான தம்பதிகளே, வேறு வேறு கலர் உடையில் தான் செல்கிறார்கள். ஆனால் இவரோ ஒரே கலர் உடையில் திருமணத்திற்கு செல்கிறார்கள் என்றால் தமிழ்நாடு மக்கள் அடிமை என்று பிளாக் டிக்கெட்டை எல்லாம் நினைக்கின்றது. தமிழ்நாடு இவர்கள் கையில் போனால் நாடு எப்படி இருக்கும் என்று நம்முடைய தோழர்கள் பிரச்சாரம் செய்ய வேண்டும் .

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் தி.மு.க. நிர்வாகிகள் குமார், சத்தியசாய், தம்பு, கோகுலக்கண்ணன், சுந்தரமூர்த்தி, எழிலரசன், உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.